# மினுவன்கொடை பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 13 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 சனவரி 04 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மினுவன்கொடை பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மினுவன்கொடை பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் புதிய கட்டிடத்திற்கு மின்தூக்கியை ஸ்தாபிப்பதற்காக மீளாய்வாண்டின் கடன்பத்திரத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா

2,158,538 தொகை நிலையான சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதியான ரூபா 19,377,186 தொகை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 13,653,123 தொகை மாத்திரம் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) வழங்கல் கட்டளைகளின் பிரகாரம் ஆண்டின் போது களஞ்சியத்தில் இருந்து விநியோகிக்கப்பட்டிருந்த பொருட்கள்/ உபகரணங்களின் பெறுமதி ரூபா 32,983,636 ஆன போதிலும் ரூபா 28,610,934 தொகை மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 4,376,225 தொகையான கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போதும் மீளப் பதிவழிக்கப்பட்டிருந்தமையால் களஞ்சியக் கடன்கொடுத்தோர் மீதி அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 161,245,366 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்படுவதற்கான சான்றுகள் இருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,347,419 ஆகக் காணப்பட்டதுடன் பேரேட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,248,889 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ரூபா 98,530 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 7,502,111 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு வருடத்திற்கு மேலாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,486,615 ஆகக் காணப்பட்டது. இம் முற்பணங்களில் கூடுதலானவை வீதி தயாரிப்பு ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டிருந்தது.

### 1.3.5 அறவிடப்படுவதற்குள்ள ஊழியர் கடன்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,986,578 ஆகக் காணப்பட்டதுடன் 03 ஆண்டு காலத்திற்கு மேல் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,586 ஆகக் காணப்பட்டது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,506,754 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,608,424 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### (அ) நிலுவையான இறை

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 9,780,586 தொகையான இறை நிலுவை மீதியில் ஒரு இறை அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்படும் மீதிகளின் பெறுமதி ரூபா 1,955,525 ஆகக் காணப்பட்டது.

#### (ஆ) நிலுவையான நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டணத் தொகை ரூபா 335,546 ஆகக் காணப்பட்டதுடன்

நிலுவையான ரூபா 5,000 தொகைக்கு மேலான 15 அலகுகளில் ரூபா 104,007 அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

**2.3 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்